# Phoenix-TNG

## *தாயகம் தேடிய தீயின் பறப்பு*

*புழுங்கிய மனங்களை பூவாகி வருடியவன்*
*பொறி  ஒன்றைப் பிழம்பாக்கி பூகம்பம் காட்டியவன்-எமை*
*அழிக்க நினைத்தோர்  அஞ்சிட ஓட்டியவன்*
*அண்ணன் பிரபாகரன்  எங்கள் வழிகாட்டி அவன்*

*எடு ஒரு முடிவதை*
*கொடு தலை விடிவிற்காய்*
*செய் அன்றேல் செத்துமடி -நல்ல*
*செயல்களால் பேசு-அட*
*இதுவன்றேல் உயிரெதற்கு*
*இனமன்றி ஏதுனக்கு*
*தலைவன் அவனே எடுத்தானேஅக்கினி-அதை*
*எங்கள் நெஞ்சிடை வைத்தானே கவனமாய்*
*எரிகொண்டு எழுந்தோம் விரிக்கிறோம் தீச்சிறகை  -இனி*
*வானெல்லாம் எரியும்*
*வையகம் பதறும்*
*பெரும்பிழை செய்தோமே எனப்பிதற்றும் -தமிழரைத்*
*தொட்டதால் தாமழிகிறோம் என்றுகுழறும்*

*அழிவைத்தந்தவனுக்கு அதையே பரிசளிப்போம்*
*அறிவின்வழிநின்று அகிலத்தை ஆட்டிவைப்போம்*
*இறைமையுடன்கூடிய எங்கள் நீதியை*
*எரியாடி வென்றெடுத்தே ஆவோம்*

*அசையுது அக்கினிச்சிறகுகள்*
*திசைகளே திறந்திடுங்கள்*
*விசையிது மின்னல்ப்பொறிகள்*
*விழிகளே நெருப்பெடுங்கள்*

*வல்லமைத் தழலாயானோம்*
*வானமே வலிமைகூட்டு*
*எரிமலை வீறு கொண்டோம்*
*வீரமே எம்மில் ஊறு*
*பூதங்கள் ஐந்தின் மேலே*
*வேதத்தின் சபதம்கொண்டோம்*
*செய்வதையே சொல்லப்போறோம்*
*தமிழீழம் வெல்லப்போறோம்*

*தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்*
***வெல்வது உறுதி!***

*அக்கினி பறவை  - அடுத்த தலைமுறை*
*Phoenix-  The  Next  Generation*